நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2020 செத்தெம்பர் 30 | நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2020இன் 07ஆம் இலக்கம்

## திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

நாணயச் சபை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீண்ட காலத் தாக்கம் காரணமாக ஏற்பட்ட சவால்மிக்க தொழிற்பாட்டுச் சூழலைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகளுக்குப் பின்வரும் திருத்தங்களை இத்தால் விடுக்கின்றது.

இதன்படி, பின்வருவன 2013ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் 2, 3 மற்றும் 4.1 இனைப் பதிலீடு செய்யும்.

2. தவணை வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்களுக்கான திரவச் சொத்துத் தேவைப்பாடு

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு குறைந்தபட்ச திரவச் சொத்துக்களை உடமையில் பேணுதல் வேண்டும். இது எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடையும் நேரத்திலும், மொத்தத் தொகையில், பின்வரும் அளவுகளிலும் பார்க்கக் குறைவாக இருக்கக்கூடாது.

(i) பின்வருவனவற்றில் ஆறு (6) சதவீதம்:-

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதி மற்றும் அத்தகைய நாளில் வியாபாரம் முடிவடைகையில் செலுத்தத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டி; அத்துடன்

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழின் முகப்புப் பெறுமதி மற்றும் அத்தகைய நாளில் வியாபாரம் முடிவடைகையில் செலுத்தத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டி; அத்துடன்

(ii) அத்தகைய கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதியில் பத்து (10) சதவீதம் மற்றும் அத்தகைய நாளில் வியாபாரம் முடிவடைகையில் செலுத்தத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டி.

3. கடன்பாட்டிற்கான திரவச் சொத்துத் தேவைப்பாடு

பணிப்புரை 2இல் உள்ள தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு குறைந்தபட்ச திரவச்சொத்து உடமையினைப் பேணுதல் வேண்டும். இது எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடைகையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மூலதன நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன்பாடுகள், அத்தகைய கடன்பாடுகளின் மொத்தப் பெறுமதியில் சொத்து மற்றும் பிணையிடப்படாத வெளிநாட்டுக் கடன்பாடுகளின் சந்தைப் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, கம்பனியின் ஏதேனும் ஈட்டினால் பிணையிடப்பட்ட கடன்பாடுகள் நீங்கலாக, பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான மொத்த வெளிநின்ற கடன்பாடுகள் மற்றும் வேறு ஏதேனும் செலுத்தப்படத்தக்கவைகளின் மொத்தத்தில் ஐந்து (5) சதவீதத்திற்கும் குறைவாக இருத்தல்கூடாது.

| | | |
|---|---|---|
| 4. இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியலின் திறைசேரி முறிகள் இலங்கை அரசாங்கப் பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களின் தேவைப்பாடு | 4.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனி அதன் மாத இறுதியில் முற்போந்த நிதியியல் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளின் சராசரியில் ஐந்து (5) சதவீதத்திற்குச் சமமான தொகையினை எல்லா நேரங்களிலும் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்கள், அரசாங்கத்தின் திறைசேரி முறிகள், இலங்கை அரச பிணையங்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பனவற்றின் வடிவில் சொத்துக்களாகப் பேணுதல் வேண்டும். |
| 5. செல்லுபடியாகும் காலம் | | தற்போதைய சவால்மிக்க சூழலில் திரவத்தன்மை மீதான அழுத்தத்தினை வெற்றி கொள்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, பணிப்புரை 2, 3 மற்றும் 4.1 என்பன 2021 மாச்சு 31 வரை ஆறு (6) மாத காலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும். |
| 6. முன்னைய பணிப்புரைகளை இரத்துச் செய்தல் | | 2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை (திரவச் சொத்துக்களுக்கான திருத்தம்) 2020 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்துச் செய்யப்படுகிறது. |

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்